# பொதுமக்களுக்கான அறிவித்தல்

## ஸ்ரீ லங்கா ரெலிகொம்மின் SEA-ME-WE-3 வடத்திற்கு விளைவிக்கப்பட்ட சேதங்கள்பற்றிய சானாதிபதி விசாரணைக்குழு

தலைப்புப் பொருளாகிய வடம் கடற்றுறை வள்ளமொன்றின் நடமாட்டத்தினால் 22.8.2004ஆம் திகதியன்று சேதப்படுத்தப்பட்டு அதன் விளைவாகப் பல்வேறு பின்விளைவுகள் ஏற்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டதாதலாலும்:

சொல்லப்பட்ட SEA-ME-WE-3 வடத்திற்கு ஏற்படுத்தப்பட்ட சேதங்களையிட்டுப் புலனாய்வுசெய்வதற்கும் அறிக்கையிடுவதற்கும் அத்துடன், குறிப்பாக,

1. ஸ்ரீ லங்கா ரெலிகொம் லிமிட்டெட்டின் SEA-ME-WE-3 வடத்தின் சேதத்திற்கான ஏதுக்களை ஆய்ந்தறிவதற்கும்:

2. ஏதேனும் அரச முகவராண்மையின் அல்லது பல அரச முகவராண்மைகளின் அல்லது அவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எவரேனும் ஊழியர்களின் எவையேனும் தவறுதல்கள் பற்றி விசாரணை செய்து அறிக்கையிடுவதற்கும்:

3. ஏதேனும் நேரத்தில் தேசிய பாதுகாப்பிற்கு ஆபத்து இருந்ததா எனத் தீர்மானிப்பதற்கும்:

4. சட்ட அணிகள் அவை செய்த தீர்மானங்களில் தவறிழைத்தனவா எனப் பரிசீலனை செய்வதற்கும்:

5. ஸ்ரீ லங்கா ரெலகொம் லிமிட்டெட்டிற்கு விளைவிக்கப்பட்ட நட்டங்களை மீட்டுப் பெறுவதற்காக பதிய சான்றுடன் பிந்திய கட்டமொன்றில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படலாமா என விதப்புரை செய்வதற்கும்: அத்துடன்

6. வருங்காலத்தில் அரசுக்கு அல்லது அதன் எவையேனும் முகவராண்மைகளுக்கு இதனையொத்த சேதங்களையும் நட்டங்களையும் தவிர்ப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை விதப்புரை செய்வதற்கும்

அமைச்சரவையின் முடிவொன்றிற்கிணங்க மேற்படி தனி உறுப்பினரைக்கொண்ட குழுவொன்று அதியுத்தமராம் சனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளது ஆதலாலும்,

மேற்கூறப்பட்ட சனாதிபதி விசாரணைக் குழு, அதியுத்தமராம் சனாதிபதிக்கு அறிக்கையொன்றைத் தயாரிப்பதற்கென சான்றையும் வேறு தகலையும் பெறுவதற்கு கீழே தரப்பட்டுள்ள முகவரியிலுள்ள இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவின் வளவுகளில் அதன் அமர்வுகளை நடத்தும்.

ஏதேனும் சான்றை அத்துடன்/அல்லது வேறு தகவலை கடிதமூலம் அல்லது தொலைநகல்மூலம் கீழ்க்கண்டவருக்கு 2005 திசம்பர் 21ஆம் திகதியன்று அல்லது அதற்குமுன் சமர்ப்பிப்பதன்மூலம் குழுவுக்குத் துணைபுரியுமாறு பொதுமக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றனர்.

மஹிந்த குலதுங்க,
உறுப்பினர்,
சனாதிபதி விசாரணைக்குழு,
மே/பா இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழு,
276, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 08.

தொலைபேசி: 2989345, 2689351, 2689352, 2679827
தொலைநகல்: 5362362
மின்னஞ்சல்: seamewe3.pic@trc.gov.lk

2005 திசம்பர் 01